**அறிவாற்றல் கரு மையத்தின் அத்திவாரமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றும் செயற்திட்டம் - மாகாண மட்டம் - 2013**

---

அறிவாற்றல் கரு மையத்தின் அத்திவாரமாக பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றும் செயற்திட்டத்தின் - மாகாண மட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஒஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆம் திகதிய 5037 எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II (பீ) (3) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அவுஸ்ரேலியா நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பவற்றுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட 2013 யூலை 18 ஆம் திகதிய ரீஎஸ் 013267 ஆம் இலக்க அவுஸ்ரேலியா மானிய உடன்படிக்கையின், II (பீ) (3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடன் மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய மட்டத்தில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கல்வி அமைச்சினால் (எம்ஓஈ) மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது மாகாண மட்டத்தில் அதன் நடவடிக்கைகள் சகல உள்ளூராட்சி மற்றும் சகல மாகாண சபைகள் என்பனவற்றால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. மாகாண மட்டத்தில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான அவதானிப்புக்கள் மற்றும் கருத்துரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்ட நிதி மதிப்பீடு ஆவணத்தின்படி, நாட்டின் பொதுக் கல்வித்துறை முகங்கொடுக்கும் சவால்களிற்காக 2012 – 2016 காலத்தில் கல்விற்துறை அபிவிருத்தி சட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தை (ஈஎஸ்டிஎவ்பீ) அமுலாக்குவதற்கான நிதி ஆதரவை வழங்குவதற்கு ரீஎஸ்ஈபீ அமுலாக்கப்படுகின்றது. இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அடிப்படையிலான அறிவுக்கு அத்திவாரத்தை வழங்குவதற்காக ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியின் அணுகுமுறை மற்றும் தரத்தை விரிவுபடுத்தல் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். நிதி அளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளின்படி, ரூபா 11,000 மில்லியனிற்குச் சமனான எஸ்டிஆர் 64.1 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) கடன்பெறுகைக்கு சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் உடன்பாடு காணப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 11,130,502 அவுஸ்ரேலிய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் வழங்கப்படுமென்று உடன்பாடு காணப்பட்டது. அதில் அத்தகைய நிதிகளில் 70 -80 சதவீத மாகாண கல்வி அதிகாரங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 20 – 30 சதவீதமான மீதிகள் கல்வி அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 ஒக்தோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியலப்படுத்தப்பட்டது. மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் 2016 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று பட்டியலப்படுத்தப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த ஒன்பது மாகாண சபைகளிற்கான ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவத்திற்கான அறிக்கை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்களிற்கிணங்க தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும்

அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த ஒருங்கிணைந்த நிதிமுகாமைத்துவ அறிக்கை தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது மாகாண சபைகள் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ ஆற்றல் பிரிவின் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கைகள் தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் மற்றும் நன்கொடையளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் மற்றும் மானியத்திற்குமான பற்றுதல்கள் நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அளவீடுகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை நிதிப்பிரமானம் 150 மற்றும் 2013 திசெம்பர் 06 ஆம் திகதிய 233/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிரூபம் என்பவற்றிக்கிணங்க தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஊ) கட்டுநிதி நியமகணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரம்பல்பன் என்பன பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பெறப்பட்டனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கையிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்குப் பதிவேடுகளுடன் நிருபத்திற்குமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நிதியளிப்பு மற்றும் மானிய கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதலுக்கிணங்க மீளளிப்பு நியாயபூர்வமாக மேற்கொள்ள முடியுமா என்பதும்.

(ஏ) நிதி மற்றும் மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா, என்பதும்,

## 3. அபிப்பிராயம்

------------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2013 திசெம்பர் 06 ஆம் திகதிய 233/2013 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்று நிரூபம் என்பவற்றுக்கிணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மேற்படி, ஒதுக்கீட்டுக் கணக்குகள் திறைசேரி கணணி அச்சுத்தாள்கள் ஆண்டு மதிப்பீடுகள் மற்றும் ஒன்பது மாகாணசபைகளால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், கடன் மற்றும் மானியத்தின் பெறுகைகளில் மேற்கொள்ளப்பட்ட கிரயங்கள் 2013 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகள் தொழிற்பாடு மற்றும் முகாமைத்துவ ஆதரவுப் பிரிவின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் முறையாக பதிவு செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதியக் கணக்கு ஒன்று மாகாண சபைகளால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் முறையாக நியாயபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அறிக்கையிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் கணக்கு பதிவேடுகளுடன் இணக்கம் செய்யப்படுகிறது என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுதலுக்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவர்களே நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 1,385,000,000 தொகையான கடன் மற்றும் மானியங்களிலிருந்தான பெறுகைகள் உள்ளடங்கலாக சகல மூலங்களிலிருந்தும் கிடைத்த நிதிகளிலிருந்து கல்வித்துறைக்காக மீளாய்வாண்டில் செய்யப்பட்ட செலவினம் ரூபா 84,578,734,546 தொகையாக இருந்தது. 2013 ஆம் ஆண்டிற்கான ஒன்பது மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் மாகாண கல்வித்துறையின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ ஆதரவுப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு நிதிகளின் சகல மூலங்களிலிருந்தும் செய்யப்பட்ட செலவினத்தின் பொழிப்பு பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றது.

| விபரம் | 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கிடைத்த நிதிகளின் சகல மூலகங்களிலிருந்தும் பெறப்பட்ட செலவினம் |
|---|---|
| | ரூபா |
| மீண்டுவரும் செலவினம் | |
| தனிப்பட்ட வேதனங்கள் | 76,888,995,912 |
| ஏனைய மீண்டு வரும் செலவினம் | 3,637,852,298 |
| மூலதனம் செலவினம் | 4,051,886,336 |
| மொத்தம் | 84,578,734,546 |

### 4.2 கட்டு நிதி நிதியக் கணக்கு

கணக்காய்விற்குத் தரப்பட்ட தகவல்களின்படி, இலங்கை மத்திய வங்கியில் செயற்திட்டத்திற்காக பேணப்பட்ட 5,696 ஆம் இலக்க கட்டு நிதி நிதியக் கணக்கின் மீளாய்வாண்டிற்கான தொழிற்பாடுகள் பொழிப்பாக்கிக் கீழே தரப்பட்டுள்ளன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |
| கூட்டு : மீள்நிரப்பல்கள் | 12,955,000 | 1,665,451,203 |
| கழி : - பற்றுதல்கள் | 10,821,974 | 1,381,595,693 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | - | 4,955,955 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 2,133,026 | 278,899,555 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

சர்வதேச அபிவிருத்தி சங்கத்தின் 2012 யூலை 31 ஆம் திகதிய கடன்கள் மற்றும் மானியங்களிற்கான பொது நிபந்தனைகள் கூற்றின் 4.09 ஆம் பிரிவின்படி, கல்வித் துறையின் செயற்திட்டம் தொடர்பான செயற்பாடு வளங்கள் மற்றும் செலவினங்களை போதியளவில் பிரதிபலிக்கும் விதமாக நிலையாக பிரயோகிக்கப்படும் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனினும், ஒன்பது மாகாண சபைகள் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சகல மூலங்களிலிருந்தும் கல்வித்துறைக்கான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ ஆதரவுப் பிரிவு என்பவற்றால் செய்யப்பட்ட ரூபா 84,578,734,545 கூட்டுமொத்த செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கையே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 6. நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

ஒன்பது மாகாண சபைகளின் மாகாண கல்வி அமைச்சுக்களின் மூலதன மற்றும் மீண்டு வரும் செலவுகளை ஈடுசெய்வதற்காக ஆண்டு பாதீட்டு மதிப்பீடுகளில் ரூபா 89,170,723,780 கூட்டுமொத்த தொகையான சகல மூலகங்களிலுமான மொத்த நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவற்றில் ரூபா 3,304,435,388 கூட்டுமொத்தத் தொகையான மொத்த ஒதுக்கீடுகளில் 5 சதவீதம் தொடக்கம் 16 சதவீதம் வரையான வீச்செல்லையில் சேமிப்புக்கள் மேல், வடமேல் மற்றும் சப்பரகமுவ மாகாணங்களின் மாகாண கல்வி அமைச்சுக்களால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிக்கையிடப்பட்டிருந்தன. மேலும், ரூபா 1,360,000,000 தொகை கடன் மற்றும் ரூபா 1,135,000,000 தொகை மானியங்கள் என்பவற்றின் பெறுகைகள் ஒன்பது மாகாண சபைகளிற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த ஒதுக்கீட்டின் நிதியளிப்பிற்கான உதவியாக முறையே சர்வதேச அபிவிருத்தி சங்கம் மற்றும் அவுஸ்ரேலிய நம்பிக்கை நிதியம் நிதியத்திலிருந்து கிடைத்தது. எனினும், மானியங்களும் அவுஸ்திரேலிய நம்பிக்கை நிதியத்திலிருந்து முழு நிதியங்களும் மாகாண சபைகளால் செலவிடப்படாமல் வைக்கப்பட்டிருந்தன. மேலும் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ரூபா 374,509,805 கூட்டுமொத்த தொகையான கடன் மற்றும் மானியங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளால் குறித்த நோக்கத்திற்காக செலவிடப்படாது மாகாண கல்வி அமைச்சுக்களால் வைப்புக் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.2 பௌதீக முன்னேற்றம்

இந்த அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சகல மூலங்களிலுமான நிதிகளிலிருந்து கல்வித்துறைக்காக மாகாண சபைகள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ ஆதரவுப் பிரிவுகள் செயற்திட்டத்தின் மாகாண சபைகளால் செய்யப்பட்ட ரூபா 84,578,738,545 கூட்டுமொத்தத் தொகையான மொத்தச் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருங்கிணைந்த நிதி முகாமைத்துவ அறிக்கை 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மாகாண கல்வி செயற்பாடுகள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டிற்கான மாகாண சபைகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்களில் சில பின்வருமாறு மீளப்பிரசுரிக்கப்படுகிறது.

(i) மாகாண மட்டத்தில் பாடசாலைகளிற்கான ஆசிரியர்களின் ஒதுக்கீடுகள் திருபதிகரமாக இருக்கவில்லை. மாகாணங்களின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் ஆசிரியர்களிற்கான பற்றாக்குறையுடன் இயங்கிய அதே சமயம் மாகாணங்களின் நகரப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் அனுமதிக்கப்பட்ட ஆளணியிலும் பார்க்க மிகையான

ஆசிரியர்களை கொண்டிருந்தன. என அறிக்கையிடப்பட்டிருந்தது. சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, சப்ரகமுவ, ஊவா மேல், தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராமப்புற பாடசாலைகளில் பிரதான பாடசாலைகளிற்கு ஆசிரியப் பற்றாக்குறை இருந்த அதே சமயம் ஆசிரியர்களிற்கான ஆண்டு மாற்றங்கள் முறையாக அமுலாக்கப்படாமையால் சம்பந்தப்பட்ட மாகாணங்களிலுள்ள நகர்ப்புற பாடசாலைகளில் ஆசிரியர்கள் மிகையாக இருந்தனர்.

(ii) சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, பல மாகாணங்களில் கிராமப் பாடசாலைகளிலுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் மாணவர் தொகை குறைந்த மட்டத்திலிருந்தன. தென்மாகாணத்திலுள்ள 827 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் 500 மாணவர்களிலும் குறைந்தளவைக் கொண்டிருந்த அதே நேரம் மத்திய மாகாணத்திலுள்ள 397 ஆரம்பமட்ட பாடசாலைகள் 100 இற்கு குறைவான மாணவர் தொகையைக் கொண்டிருந்தன தென்மாகாணத்தால் 138 பாடசாலைகள் மீளாய்வாண்டில் மூடப்பட்ட இரண்டு பாடசாலைகள் உட்பட 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூடப்பட்ட நிலையிலிருந்தன என்று அவதானிக்கப்பட்டது.

(iii) 05 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரிட்சையில் மாணவர் சித்தியடையும் மத்திய மாகாணத்தில் 6.82 சதவீதமாக இருந்த அதே நேரம் ஏனைய மாகாணங்களின் மாணவர்கள் சித்தியடையும் வீதம் 9.5 சதவீதம் தொடக்கம் 11.5 சதவீதம் வரையான வீச்செல்லையிலிருந்தன. மேலும், கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதரணதரம்) பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடையாதோர் வீதம், மேல், சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மாகாணங்களில் 4 சதவீதம் தொடக்கம் 8 சதவீதம் வரை உயர் வீச்செல்லையிலிருந்தன மேலும் கல்விப் பொதுத்தாராதரப் பத்திர (உயர்தரம்) பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியடையாதோர் வீதம் வடமேல்/தென்/மத்திய, வடமத்திய மற்றும் மேல் மாகாணங்களில் 10 சதவீதம் தொடக்கம் 16 சதவீதம் வரை வீச்செல்லையில் உயர்வீதத்திலிருந்தன.

(iv) ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களின் மாகாணக் கல்வித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தை சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் ஆண்டு நடவடிக்கைத் திட்டங்கள் மற்றும் செயலாற்றல் மீளாய்வு அறிக்கைகள் இல்லாதமை காரணமாக கணக்காய்வில் நியாயபூர்வமாகப் மதிப்பீடு செய்ய முடியவில்லை. மேலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாண சபையில் உள்ளக கணக்காய்வுப் பிரிவு தொழிற்பட்டிருக்கவில்லை என்று அறிக்கையிடப்பட்டிருந்தது. கிழக்கு மற்றும் வடமத்திய மாகாண சபைகளின் கல்வி அமைச்சுக்களின் செயலாற்றலை மீளாய்வு செய்யக் கூடிய விதத்தில் சம்பந்தப்பட்ட மாகாண சபைகளில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(v) சொத்துக்களின் பௌதிக உள்ள தன்மையை உறுதிப்படுத்துவதற்கான 2013 ஆம் ஆண்டிற்காக ஆண்டு கணிப்புச் சபைகள் தென், வடமத்திய, மற்றும் ஊவா மாகாணங்களின் மாகாண கல்வித் திணைக்களங்களினால் 2013 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) மேல், கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் மாகாண கல்வித் திணைக்களங்களிற்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள், கணனிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள், ஆசிரியர் விடுதிகள், போன்றவாறான சொத்துக்கள் காணாமற்போன அல்லது குறைபயன்பாட்டிலிருந்த பல சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன.

(viii) ஆதார ஆவணங்களில்லாது அல்லது முறையான அதிகாரமின்றி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படாதமை, நீண்ட காலமாக முற்பணங்கள் தீர்க்கப்படாதிருந்தமை போன்றவாறு மாகாண மட்டப்பாடசாலைகளில் நிதிக் கட்டுப்பாட்டு நலிவுகள் சப்பிரகமுவ , மேல் மற்றும் தென் மாகாணங்களின் செயலாற்றல் கணக்காய்வில் அறிக்கையிடப்பட்டிருந்தன. மேலும், மனிதவள முகாமைத்துவம், ஆசிரியர்களின் விடுமுறை தர உள்ளீடுகளிற்காக முறையான பதிவேடுகள் பேணுதல் மற்றும் மாணவர்களின் புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்க மானியங்கள் விநியோகித்தல் மற்றும் ஆசிரியர்களின் இடர் நிவாரணம் மற்றம் ஏனைய கடன்கள், வீட்டு வாடகைகள் முதலியவற்றிற்க்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மாதாந்த அறவீடுகள் போன்றன மேல், கிழக்கு, சப்பிரகமுவ, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களின் மாகாண கல்வித் திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட விபரமான கணக்காய்வுகளில் அவதானிக்கப்பட்டன.